Registered as a news paper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | ஆவணி – 1972 | விலை 30 | இதழ் 8 |
|---|---|---|---|---|

# ஈழத்தின் முதல் தமிழ் ஆயரின் மறைவு.

**யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் ஆயர், பேரருள்திரு ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள் சென்ற மாதம் 17ந் திகதி சடுதியாக இறைவனடி சேர்ந்தார்** என்ற துக்கச் செய்தியைக் கேட்டவர்கள் அனைவரும் ஆழ்ந்த துயரத்தை அடைந்தனர். ஏனெனில், ஆயர் அவர்கள் ஈழத்தின் கத்தோலிக்க மக்களால் மட்டுமல்ல, கத்தோலிக்கர் அல்லாத ஏனைய மக்களாலும் நன்கு அறியப்பெற்று, பெருமதிப்பைப் பெற்றுவந்தவர். கடந்த 22 ஆண்டுகளாக யாழ்ப்பாண மேற்றிராசனத்தை மிகத் திறமையுடன் இறைவனின் பாதையில் வழிநடத்தி வந்தார்.



ஈழத்தின் முதல் தமிழ் ஆயர் அவரே. ஆயர் அவர்கள் திவ்விய நற்கருணை மட்டிலும், பரிசுத்த தேவமாதா பேரிலும் ஆழ்ந்த பக்தியுள்ளவராக விளங்கினார். இப் பக்தியை விசுவாசிகளுக்கும், துறவியருக்கும், குருக்களுக்கும் அளிக்க அயராது உழைத்து வந்தார். அவரது ஞான ஆட்சியின்கீழ் யாழ்ப்பாண மேற்றிராசனம் பல துறைகளில் தீவிர முன்னேற்றமடைந்துள்ளது.

மறைந்த ஆயரின் இறுதிச் சடங்குகள் சென்ற மாதம் 21ந் திகதி யாழ்ப்பாண ஆசனக் கோயில் மைதானத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறின. மூன்று நாட்களாக யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் எல்லாப் பங்குகளிலுமிருந்து

(16ம் பக்கம் பார்க்கவும்)

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (துணை ஆயர்)

## (37) திருமணம் என்னும் திருவருட்சாதனத்தின் இயல்பும் மாண்பும்.

மனிதரைப் படைத்த இறைவன், அவர்களை ஆணும் பெண்ணுமாகவே படைத்து, காம இயல் பூக்கம் என்னும் அரிய சக்தியை அவர்கட்கு அளித்து, மனுக்குலத்தை விருத்தி செய்யும்படி அவர்கட்கு கட்டளையிட்டார் (ஆதி. 1:27-28). இதுவே திருமணத்தின் ஆரம்பம்.

திருமணம் தன் இயல்பிலே பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதைத் தனது நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டுள்ளது. இதுவே அதன் சிகரமாகவும் அமைகின்றது. குழந்தைகள், சமுதாயம் ஆகியோரின் நன்மையைக் கருதுங்கால் திருமணம் என்னும் பிணைப்பு பிரிக்க முடியாத ஒன்றிப்பையும், முழுப் பிரமாணிக்கத்தையும் வேண்டி நிற்கின்றது. ஆகவே, திருமணம், மணமக்கள் ஒருவருக்கொருவர் தங்களையே அளித்துப் பெற்றுக்கொள்வதைப் பொருளாகக் கொண்டுள்ள ஒப்பந்தத்தில் அதாவது, மாற்றமுடியாத சம்மதத்தில் தங்கியிருக்கின்றது (இன்றைய உலகில் திருச்சபை இ. 48).

ஆதியிலே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட திருமண வாழ்வைக் கிறிஸ்துநாதர் ஆசீர்வதித்ததுமல்லாமல், திருமண ஒப்பந்தத்தை ஒரு திருவருட் சாதனமாகவும் உயர்த்தி, அதற்கு மேலான மாண்பையும் அளித்துள்ளார். எவ்வாறெனில். கிறிஸ்தவர்களின் திருமண ஒப்பந்தம் கிறிஸ்துநாதருக்கும் அவரது நேசப் பத்தினியாகிய திருச்சபைக்குமுள்ள பிரிக்க முடியாத, வளமிக்க, அன்னியோன்னிய அன்பையும் ஒற்றுமையையும் குறித்துக் காட்டும் அடையாளமாக விளங்குவதுடன், அதைத் தனது மாதிரியாகவும் கொண்டுள்ளது. ''கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடி இருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது. இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும்'' என்று புனித சின்னப்பர் கூறியுள்ளார் (எபே. 5:31-32). ''கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்து அதற்காகத் தம்மையே கையளித்தார். அத் திருச்சபை கறை திரையோ, வேறு எக்குறையோ இன்றி, பரிசுத்தமும் மாசற்றதுமாய்த் தம் திருமுன் மகிமையோடு துலங்கச் செய்யவேண்டுமென்று அவர் திருவார்த்தையாலும் முழுக்கினாலும் அதைத் தூயதாக்கிப் பரிசுத்தமாக்குவதற்குத் தம்மைக் கையளித்தார். அவ்வாறே கணவர்களும் தம் மனைவியரைத் தம் சொந்த உடலெனக் கருதி அவர்களுக்கு அன்புசெய்ய வேண்டும்'' என்றும் அவர் கூறியுள்ளார். (எபே. 5:26-28).

### திருமணத்தால் உண்டாகும் கடமைகள்:

திருமணம் தனக்கே உரிய அன்புச் செயல்களினால் நிறைவு பெறுகின்றது. இச் செயல்களில் ஈடுபட மணமக்களுக்கு உரிமை மட்டுமல்ல கடமையும் உண்டு. ''கணவன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யட்டும்; அவ்வாறே மனைவியும் கணவனுக்குச் செய்யட்டும். மனைவிக்குத் தன் உடல் மேல் உரிமையில்லை; கணவனுக்கே அந்த உரிமையுண்டு. அவ்வாறே கணவனுக்கும் தன் உடல் மேல் உரிமையில்லை; மனைவிக்கே அந்த உரிமையுண்டு. ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமையை மறுக்காதீர்கள்'' என்று புனித சின்னப்பர் கூறியுள்ளார் (1 கொரி. 7:3-4)

''திருமண அன்பு, மணமக்கள் ஒருவருக்கொருவர் அளிக்கும் வாக்குறுதியால் முத்திரையிடப்பட்டது; எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்துவின் திருவருட் சாதனத்தால் புனிதப்படுத்தப்பட்டது; இன்பத்திலும் துன்பத்திலும், உடலிலும் உள்ளத்திலும்

[3ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

தவறக்கூடாத முறையில் பிரமாணிக்கம் கொண்டது. ஆகையால், அது எல்லாவித விபசாரத்தையும் மணமுறிவையும் புறம்பாக்குகிறது'' (இன்றைய உலகில் திருச்சபை இ. 49)

திருமணமும் திருமண அன்பும் தம் இயல்பிலே பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்கென்றே அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே, மனித உயிர் அளித்துக் குழந்தைகளை வளர்க்கும் கடமையை மணமக்கள் தங்களுக்கே உரித்தான பொறுப்பாகக் கருதவேண்டும். இப்பணியை ஆற்றுகையில் தாங்கள் கடவுளின் அன்போடு ஒத்துழைப்பவர்களாய், ஒரு விதத்தில் அவ்வன்பிற்குப் பொருள் விளக்கம் தருபவர்களாய், இருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கவேண்டும். ஆகவே, அவர்கள் தங்களின் அலுவலை மனிதனுக்குரிய பொறுப்புணர்ச்சியுடனும், கிறிஸ்தவனுக்குரிய பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்ற வேண்டும் (இன்றைய உலகில் திருச்சபை இ. 50).

''மணமக்கள் தாயாகவும் தந்தையாகவும் இருக்கும் மேன்மையையும் பணியையும் கொண்டிருப்பதால், முதல் முதல் அவர்களைச் சார்ந்த, கல்வியூட்டும் கடமையை, முக்கியமாக மறைக்கல்வி புகட்டும் கடமையைக் கருத்துடன் நிறைவேற்றுவார்களாக'' (இன்றைய உலகில் திருச்சபை இ. 48).

''கிறிஸ்தவ மணமக்கள் தங்களின் நிலைமையிலிருந்து எழும் கடமைகளுக்கும் மதிப்பிற்கும் ஏற்றவாறு வாழ, தனிப்பட்டதொரு அருட்சாதனத்தின் வழியாக வலுப்பெறுகின்றனர். ஒரு வகையில் திருநிலைப்படுத்தப் படுகின்றனர். இந்தத் திருவருட்சாதனத்தின் ஆற்றலால் தங்களின் திருமண, குடும்பக் கடமைகளை நிறைவேற்றிக்கொண்டு, விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு ஆகியவற்றால் தங்களின் வாழ்வு முழுவதையும் நிறைத்து நிற்கும் கிறிஸ்துவின் மனநிலையில் ஊறித் திளைத்தவர்களாய் அவர்கள் அதிகமதிகமாய்த் தங்களை நிறைவுடையவர்கள் ஆக்குவதோடு, ஒருவரொருவரையும் புனிதப்படுத்துகிறார்கள்'' (இனறைய உலகில் திருச்சபை இ. 48).

## திருமணத் திருச்சடங்குமுறையின் சீரமைப்பு:

2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின்முன் உரோமானிய ரீதியில் திருமணத் திருச்சடங்கு எப்போதும் பூசைப்பலிக்குப் புறம்பாகவே நிறைவேற்றப்பட்டு வந்தது. திருமணப் பூசையில் மணமகளுக்கு மட்டுமே விசேட ஆசீர் அருளப்பட்டது. இந்த முறையைத் திருத்தியமைக்க விரும்பி, 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் பின்வரும் விதிகளை விதித்தது: ''உரோமைத் திருச்சடங்கு நூலில் காணப்படும் திருமணச் சடங்கைத் திருத்தியமைக்க வேண்டும். இந்தத் திருவருட்சாதனத்தின் அருளை மிகத் தெளிவாகக் குறிக்கும் வகையிலும், மணமக்களின் கடமைகளை உணர்த்தும் வகையிலும் அதனை வளப்படுத்தவேண்டும்.

''திருமணம் என்னும் திருவருட்சாதனத்தை நிறைவேற்றுவதில் எந்த மாநிலங்களும் போற்றற்குரிய வேறு பழக்க வழக்கங்களையும் சடங்குகளையும் கையாண்டு வந்தால், அவை அனைத்தையும் மாற்றாது காக்கவேண்டுமென்று திருச்சங்கம் பெரிதும் விழைகின்றது.

மேலும், இந்தக் கொள்கைத்திரட்டு எண் 22, (2)இல் குறிப்பிட்டுள்ளபடி, தகுதி வாய்ந்த மாநிலத் திருச்சபை அதிகாரிகள், எண் 63 இல் கூறப்பட்டுள்ள விதிக்கேற்ப, அந்தந்த இடங்களிலும் மக்களிடமும் காணப்படும் பழக்க வழக்கங்களுக்குப் பொருந்தும்படியான தனிப்பட்டதொரு திருமணச் சடங்கை உருவாக்க ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். எனினும், திருமணத்தின்போது துணை நிற்கும் குரு, மணமக்களின் இசைவைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கான சட்டம் நிலை நிற்க வேண்டும்.

''வழக்கமாகத் திருப்பலியிலேயே, அதாவது சுவிசேஷ வாசகம், திருவுரை ஆகியவற்றிற்குப் பின்னும் விசுவாசிகளின் மன்றாட்டுக்கு முன்னும், திருமணம் நிறைவேற்றப்படவேண்டும். மணமக்கள்மீது சொல்லப்படும் செபம், மணமக்கள் இருவரின் சரியொத்த கடமைகளையும் அவர்கள் தம்முள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கவேண்டிய பிரமாணிக்கத்தையும் உணர்த்தும் வகையில் பொருத்தமாகத் திருத்தப்பெற வேண்டும்''

''திருமணம் என்னும் திருவருட்சாதனம் திருப்பலியின்றி நிறைவேற்றப்படுமாயின் சடங்கின் தொடக்கத்தில் திருமணத் திருப்பலியின் நிருபமும் சுவிசேஷமும் வாசிக்கப்படவேண்டும். மணமக்களுக்கான ஆசீர் எப்போதும் வழங்கப்படவேண்டும்'' (இறைபணி இ. 77,78).

இவ்விதிகளுக்கேற்ப திருமணத் திருச்சடங்குமுறை இப்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலகில் கிறிஸ்தவ துறவி

**"றெக்ஸ்"**

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'' என்பதற்கிணங்க, உண்மையான கிறிஸ்தவ துறவி உலகிற்குப் பயந்து, அதை வெறுத்து விட்டோடி, நான்கு சுவர்களைத் தனக்குத்தானே கட்டியெழுப்பிக் கொண்டு, அதிலே ஒழிந்து உலகைச் சபித்தே காலம் தள்ளும் ஒருவர் அல்லர். ஆனுல் விசுவாசத்தின் ஒளியால் தெளிவடைந்து, உலகை உண்மையாய்ப் புரிந்துகொண்டு, அதற்கும் தனக்கும் சக படைப்பு என்ற ரீதியிலும் சேவையாளன் என்ற ரீதியிலும் உள்ள நெருங்கிய தொடர்பை உணர்ந்து, இறைமகன் இயேசுவைப்போல இறுதிவரையிலும் அதன்பால் அன்புபூண்டு, அந்த அன்பினுல் இவ்வுலகிற்கு ஓர் அர்த்தத்தை அளிப்பவரே உண்மைத் துறவியாவார்.

உலகத்தைத் துறந்ததினுல் மாத்திரமல்ல ஒரு கத்தோலிக்க குரவரோ, மறைச் சகோதர சகோதரியோ துறவியாவது. ஆனுல் அனைத்திற்கும் மேலாக இறைவனைத் தனது வாழ்வும் வழியுமாக ஏற்றுக்கொண்டு, அதனுல் அடைந்த தெளிவினுலும் சாந்தியினுலும் முழுவுலகிற்கும் தனது அன்பையும் சேவையையும் திறந்து விடுவதினுல்தான் அவர் ஒரு துறவியாகிருர்.

முற்றும் ஒதுங்கி வாழும் பற்றற்ற யோகியல்ல ஒரு கிறிஸ்தவத் துறவி. தன் இறைவனும் இயேசுவைப்போல் தன்னையே வெறுமையாக்கி, சேவைக்காக அடிமைக் கோலம் பூண்டு, அவருக்காக உலகின் கண்களுக்கு எதிர்க்கப்படும் அறிகுறியாக, இகழ்ச்சிப் பொருளாக இருக்கிருர். அதே வேளையில், ஒரு கிறிஸ்தவத் துறவி உலகின் ஒளியாக, அதற்குச் சாரமேற்றும் அர்த்தம் கொடுக்கும் உப்பாக, மற்றவர் கண்டு பாவிக்கக் கூடியளவு உயர்ந்து நிற்கும் குன்றின் மேற் கட்டப்பட்ட நகரமாக, அவதரித்த இயேசுவைப்போன்று உலகோடு கை கோர்த்து ஒன்ருயிருப்பவராக விளங்குகிருர்.

எனவே, துறவற வாழ்வு என்பது அன்பு நிறைந்த வாழ்வு, சேவை நிறைந்த வாழ்வு, செபதபம் நிறைந்த வாழ்வு! ஆம், சுருங்கக் கூறின், அது ஒரு உயர்ந்த மனித வாழ்வு. ஆம், அது ஒரு மனித வாழ்வு. கிறிஸ்துவத் துறவி ஒரு மனிதன். மனிதன் எனப்பட்டவனுக்கு எவையெல்லாம் பொருந்துமோ அவையனைத்தும் துறவிக்கும் பொருந்தும். வீரமும், விவேகமும், பகுத்தறிவும், அன்பும், ஆண்மையும் நிறைந்த ஒருவனே குருவாவதற்குத் தகுதி பெற்றவன். அதேபோல் பண்பும், அடக்கமும், அன்பும், தாய்மையுணர்வும் கொண்ட ஒரு முழுப்பெண்ணே கன்னிகையாவதற்குத் தகுதி பெற்றவள். ஆம், ஒரு குரு அல்லது ஒரு கன்னிகை இறைவனின் பீடத்தில் காயீன் என்பவனுல் வைக்கப்பட்ட சூம்பலும் சொள்ளையும் நிறைந்த தரக்குறைவான பலிப்பொருளல்ல; ஆனுல், ஆபேல் அளித்த செம்மறியைப்போலத் தூய்மையானது, சிறந்தது, முழுமையானது.

உண்மையான தந்தையாக, அன்புள்ள கணவனுக இருக்கமுடியாத ஒரு ஆண், அல்லது அன்புள்ள தாயாக, பண்புள்ள ஒரு மனைவியாக இருக்கமுடியாத ஒரு பெண், குருவாகவோ, கன்னிகையாகவோ வரத் தகுதியுள்ளவர்கள் அல்லர். ஏனெனில் உண்மையான ஆண்மையிலும் பெண்மையிலும்தான் துறவறத்திற்கு முழுமையான அர்த்தமுண்டு.

இறைமகன் இயேசுவே மனிதனுக, அதுவும் முழு மனிதனுக, இருக்கத் திருவுளம் கொண்டாரென்ருல், மனிதனுக இருப்பதில் இன்றும் திருப்தி கொள்கிருரென்ருல், ஏன் துறவியினுல் மனிதனுயிருக்கமுடியாது? எதற்காகச் சிலவேளைகளில் மனிதனுயிருக்கப் பயப்படவேண்டும்?

பழுக்கக் காய்ச்சப்பட்டுச் செந்தழலாயிருக்கும் இரும்பைக் குளிர வைக்க, அதனை நீரிற் போட்டால் நீர் முதலில் இரும்பைப் போல் சூடாகி, பின்னர் இரும்பைத் தன்னைப் போல் குளிர்ச்சியுள்ளதாகச் செய்யும். இறைமகன் இயேசுவும் இதையேதான் செய்தார். மனிதனை மீட்க வந்த அவர், மனிதனுகப் பிறந்து, மனிதனுகவே வாழ்ந்து மனிதனை மீட்டார். அதேபோன்று கிறிஸ்துவத் துறவியும் உலகினுள் காலடி எடுத்துவைக்கவேண்டும். பாவம் தவிர மற்றவை அனைத்திலும் உலகத்தோடு ஒன்ருகப் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். சேற்றினுள் புதைவது போலல்லவா இது? என்று நீங்கள் மறுக்கக் கூடும். ஆம், அதுவேதான் தாமரை தன் இயல்பிலிருந்து மாருதவரை அதற்குச் சேற்றிலும் மதிப்புண்டு, பூந்தொட்டியிலும் மதிப்புண்டு, இறைவனின் பீடத்திலும் மதிப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய மன்றம்

## போர்த்துக்கீசர் காலத்தில் ஈழத்தில் எழுந்த கத்தோலிக்க தமிழ் இலக்கிய நூல்கள்

### (2) ஞானப்பள்ளு

ஞானப்பள்ளு என்னும் நூலும் யாழ்ப்பாணக் கத்தோலிக்க புலவர் ஒருவரால் 17ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் இயற்றப் பெற்றதாகும். ஆசிரியர் தனது நூலை 17ம் நூற்றாண்டின் மத்திய பாகத்தில் இலங்கையில் ஞானத்தொண்டாற்றிய செபஸ்தியாம் பொஞ்செக்கா என்னும் இயேசு சபைக் குருவானவருடைய உதவியுடன் இயற்றினாரென்று ''ஆசிரியர் வணக்கம்'' என்ற பாகத்தில் துலக்கமாகக் கூறுகின்றார்.

''வேதலட்சனதாரி மெஞ்ஞான போதகன்
வித்தியாபாரகனுயர்
வெண்ணிலவு மண்டலம் வெண்கதிரின்
மண்டலம் மேலுலக விண்மண்டலம்,
ஆதிகைக்குள நீள மைம்பூத நிலைகளும்
அண்டகோளச் சொருபமும்
அருவான ஆத்துமா நிலைமை லாபங்களும்
ஆரணப்படி கற்றவன்
நாதனுத்தம யேசு தோழமைச்சபையதனில்
நன்மைகுடிகொண்ட முனிவன்
நம்பிய சன்னாசி பதினாலு கற்பனைகள்மிக
நழுவாதியற்றி வருவோன்
சேதங்க ளேதங்கள் பேதங்களில்லாத
செவ்வஸ்தியாம் பொஞ்
செக்கெனுந் தேசிகரினுதவியாற் பள்ளினிசை
செப்பத் துணிந்தெனம்மா''.

பள்ளு என்பது தமிழிலுள்ள 96 பிரபந்த வகைகளுள் ஒன்று. அதற்கு உழத்திப் பாட்டு என்னும் மறுபெயருமுண்டு. வீரமாமுனிவர் 1732ல் இயற்றிய **சதுரகராதி** என்ற நூலில் தொகையகராதி என்னும் பாகத்தில் பிரபந்தங்களின் இலக்கணங்களைக் கூறும் போது உழத்திப்பாட்டு என்பதற்குப் பின்வருமாறு இலக்கணம் கூறுகின்றார்: ''கடவுள் வணக்கம், முறையே மூத்தபள்ளி இளைய பள்ளி குடும்பன் வரவோடு அவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு, நாட்டு வளன், குயிற்கூக் கேட்டல் மழை வேண்டிக் கடவுட் பரவல், மழைக்குறி ஓர்தல், ஆற்றின் வரவு, அதன் சிறப்புக் காண்தல், இவற்றிற்கிடையிடை அகப்பொருட்டுறையுங் கூறிப் பண்ணைத் தலைவன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, இளையாளை அவன் உரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச்செயல் வினவல், அவன் அது கூறல், ஆயரை வருவித்தல், அவர் வரல்' அவர் பெருமை கூறல், மூத்த பள்ளி முறையீடு, குடும்பன் கிடையிருந்தான் போல வரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளி அடிசிற் கொடுவரல், அவன் அவளோடு கூறல், அவன் அவளை மன்னித்தல் கேட்க வேண்டல், அவள் மறுத்தல், அவன் சூளுறல், அவள் அவனை மீட்கவேண்டிப் பண்ணைத்தலைவனைப் பரவல், விதை முதலிய வளம் கூறல், உழவர் உழல், காளை வெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவன் எழுந்து வித்தல், அதைப் பண்ணைத்தலைவற்கு அறிவித்தல், நாற்று நடல், விளைந்தபின் செப்பஞ்செய்தல், நெல் அளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க்கொருவர் ஏசுதல், என இவ்வுறுப்புக்கள் உழப்பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்கு தோற்றச் சிந்தும் விருத்தமும் விரவிவர இவற்றாற் பாடுவது''.

பேரருள்திரு. வ. தியோகுப்பிள்ளை
ஆண்டகை.

இவ் அம்சங்கள் யாவும் ஞானப்பள்ளு என்னும் நூலில் ஏறக்குறையக் காணப்படுகின்றன. கடவுள் வணக்கம், காப்பு, அவையடக்கம், ஆசிரியர் வணக்கம், தரு என்ற அம்சங்களின்பின் உழத்திப்பாட்டு தொடர்கின்றது, அதில் பின்வரும் தலைப்புகள் இடம் பெறுகின்றன. பள்ளன் பள்ளியர் தோற்றம், நாட்டுவளம் கூறல், பள்ளியர் தலைவன்

[6ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய மன்றம்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பெருமை கூறல், குயில் கூவல், மழை பெய்ய வரங்கேட்டல் மழை பொழிதல், ஆற்றில் வெள்ளம் வருதல், பண்ணைக்காரன் தோற்றம், மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடுதலும் இளையபள்ளி எதிர்மாற்றம் கூறலும், பண்ணைக்காரன் பள்ளனிடம் கணக்குக் கேட்டல், பள்ளன் கணக்குக் கூறல், மூத்த பள்ளியின் முறையீடும் விசாரணையும், பள்ளன் குட்டையிலடைபடலும் அவனது புலம்பலும், மூத்தபள்ளி அவனுக்காக வருந்தி பரிந்துரைத்தல், பள்ளன் விடுதலையடைதல், வயலுழுதல், பள்ளன் எருதுமுட்டி மூர்ச்சித்து விழல், மூத்தபள்ளி அழல், பள்ளன் எழுந்திருத்தல், நாற்று நடுகை காணவருமாறு பள்ளியர் பண்ணைக்காரனை வேண்டுதல், நாற்று நடுதல், அரிவி வெட்டுதல், சூடடுக்குதல், பள்ளியர் ஒருவரையொருவர் ஏசுதல், என்பன.

ஞானப்பள்ளு, மருதநில மக்களின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து, கிறிஸ்து பெருமானைப் பாட்டுத் தலைவன் (பள்ளன்) ஆகக் கொண்டு, கிறிஸ்து மதக் கோட்பாடுகளையும் அதன் பெருமைகளையும் எடுத்துக் கூறுகின்றது. அதில் இடம்பெறும் மூத்தபள்ளி **எருசலேம் நகரையும்**, இளைய பள்ளி **உரோமை நகரையும்**, பண்ணைக்காரன் **இறை தந்தையையும்** குறிக்கின்றனர். இந்நூலை இயற்றிய புலவர் வேதாகமம் கிறிஸ்துமதக் கோட்பாடுகள், திருச்சபைச் சரித்திரம் என்னும் துறைகளில் பரந்த அறிவுள்ளவராக இருந்தாரென்பது நூலைப் படிக்கும்போது தெற்றெனத் தெளிவாகின்றது. அவருடைய பெயர் நூலில் குறிக்கப்படவில்லை.

பள்ளு என்பது ஓர் இசைநாடகத் தமிழிலக்கியம். இசைத் தமிழின் சந்தமும் நாடகத் தமிழின் நடிப்புப்பான்மையும் தோன்ற யாக்கப்படுவது பள்ளுப் பிரபந்தமாகும். ஞானப்பள்ளும் ஓர் இசை நாடகமே. அது தோன்றிய காலத்தில் தெல்லிப்பளையில் கத்தோலிக்க ஆலயத்திற்கு அருகாமையில் ஒரு நிரந்தர நாடக மண்டபம் அமைக்கப்பட்டிருந்ததாக சரித்திர ஏடுகளிலிருந்து முன் அறிந்தோம். இந்த மண்டபத்தில் ஞானப்பள்ளும் நடித்துக் காட்டப்பட்டிருக்க வேண்டுமென்று எண்ணுவதற்கு இடமுண்டு.

ஈழத்தெழுந்த பள்ளு நூல்களுள் ஞானப்பள்ளு ஒன்றே ஏறக்குறைய முழுமையாக நமக்குக் கிட்டியுள்ளது. அது ஏறக்குறைய 250 ஆண்டுகளாக ஏட்டுவடிவில் இருந்தபின் 1904ல், முதல்முறையாக சில்லாலைப் பண்டிதர் ச. அந்தாம்பிள்ளை அவர்களால் (இவர் அருட்திரு. ஏ. எஸ். சிங்கராயர் அ. ம. ப. அடிகளின் பேரனூர்) பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து தொகுக்கப்பட்டு, மாதகல் திரு. வ. லோ. அமிர்தநாதபிள்ளை அவர்களால் (இவர் அருள்திரு. லோ. அ. சிங்கராயர், அ. ம. ப. அடிகளின் தந்தை) தமது **“தைரிய நாதர் அச்சகத்தில்”** அச்சேற்றப்பட்டது.

ஞானப்பள்ளின் முதற் பதிப்புப் பிரதிகள் அரிதாகிவிட்டமையாலும், அப்பிரதிகளிலிருந்து நூலைப்படித்தல் மிகச் சிரமமாயிருந்தமையாலும், கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாது, தற்கால தேவைகளுக்கேற்ற ஒரு தரமான புதிய பதிப்பை வெளியிட்டுள்ளார். அன்னாரின் இலக்கிய ஆர்வத்தையும், பெரு முயற்சியையும் நாம் பெரிதும் பாராட்டவேண்டும் முதற் பதிப்பில் அசை, சீர், தளை முதலியன பிரிக்கப்படாதிருந்த செய்யுள்களை இப் புதுப் பதிப்பில் பதிப்பாசிரியர் அவ்வாறு பிரித்தும், இசை வகுத்தும் பதிப்பித்துள்ளார். இன்னும், செய்யுள்களுக்குப் பொருத்தமான பெயரிட்டும், முழு நூலையும் உப தலைப்புகளாக வகுத்தும், செய்யுள்களுக்குத் தொடரிலக்கமிட்டும், முதற் பதிப்பில் காணப்பட்ட எழுத்துப் பிழைகள், அச்சுப் பிழைகள் ஆகியவற்றை நீக்கியும், அவசியமெனத் தோன்றிய சில மாற்றங்களைச் செய்தும் நூலைப் பதிப்பித்துள்ளார். இவற்றின் பயனாக இப்பதிப்பில் நூலைப் படித்தல் மிகவும் எளிதாகவும், இன்பமாகவும் அமைகின்றது (அரசு வெளியீடு, 231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு 13).

நூலைப் பயனுடன் படிப்பதற்கு உறுதுணையாக பதிப்பாசிரியர் **“பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்”** **“ஞானப் பள்ளு நூலாராய்ச்சி”** என்னும் இரு சிறந்த கட்டுரைகளையும் தந்துள்ளார். இரண்டாவது கட்டுரையில் நூலின் இலக்கிய நலனைப் பின்வருமாறு விளக்குகின்றார். “நூலின் நலனை அறிவதற்குக் கிறிஸ்தவ மதப் புராண வரலாறுகளைப் பற்றிய அறிவு மிக இன்றியமையாததாகும். செருசலே, உரோமாபுரி ஆகிய புனித தலங்களுடன் தொடர்புபட்ட வரலாறுகள் நூலிற் செறிந்துள்ளன. நூலின் மொழிநடை மிக இலகுவானதாகும்; யாப்பு எளிமையானது; உண்மை யுருவகங்கள் கற்பனைகள் மிகக் குறைவு; நூலின் நடை ஆற்

(16ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமத்தைப் படிப்போம்

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

## 6. இறைவெளிப்பாடு வழங்கப்பட்ட வழிகள்:

### (2) திருமறை நூல்

வேதாகமத்தில் **பழைய ஏற்பாடு** எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றதென்றால் புதிய ஏற்பாட்டின் விளக்கம் பழைய ஏற்பாட்டில் காணக்கிடக்கின்றது. இறந்த கால, நிகழ்கால, எதிர்கால மக்கள் அனைவரினதும் மீட்பரான கிறிஸ்துவின் வருகையை முன் அறிவிப்பதும், அதன் பொருளை முற்குறிகளால் சுட்டிக் காட்டுவதுமே, பழைய ஏற்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

பழைய ஏற்பாட்டு நூல்கள் நிறைவற்றதும், உலகைச் சார்ந்ததுமான சில காரியங்களைக் கொண்டிருந்தாலும், இரக்கமும் நீதியும் நிறைந்த இறைவன், மனிதருடன் பழகும் முறைகளையும், அக்காலத்து நிலைக்கேற்ப இறைவனையும், மனிதனையும் பற்றிய அறிவையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. பழைய ஏற்பாட்டு நூல்களில் நம் மீட்பின் மறைபொருள் மறைந்து கிடக்கின்றது. எனவே இறைமக்கள் இவற்றை இறைப்பற்றுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

விசுவசிப்பவர்கள் அனைவரையும் மீட்கும் ஆற்றல் படைத்த இறைவனின் வார்த்தை, திருமறை நூலில் சிறப்பாக **புதிய ஏற்பாட்டு** நூல்களில் அடங்கியுள்ளது. புனித சின்னப்பர் கூறுவதுபோல காலம் நிறைவேறியபோது வார்த்தையானவர் மனுவுருவானார் (கலா. 4. 4). புனித அருளப்பர் கூறுவதுபோல, அருளும் உண்மையும் நிறைந்து விளங்கி நம்மிடையே குடிகொண்டார் (அரு. 1, 14). கிறிஸ்து, இறைவனின் அரசை இவ்வுலகில் ஏற்படுத்தினார்.

தம் தந்தையையும், தம்மையும், சொல்லாலும், செயலாலும் வெளிப்படுத்தினார். இறப்பு, உயிர்ப்பு, மாட்சிநிறை விண்ணேற்றம், பரிசுத்த ஆவியின் வருகை, இவற்றால் தமது அலுவலை கிறிஸ்து நிறைவு செய்தார். இவ் உண்மைகளைப் புதிய ஏற்பாட்டு நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. புதிய ஏற்பாட்டில் சுவிசேசங்கள் சிறந்த ஓர் இடத்தை வகிக்கின்றன. ஏனெனில் மனுவுரு எடுத்த வார்த்தையான நமது மீட்பரின் வாழ்வுக்கும் போதனைக்கும் முக்கிய சான்றுகளாக அவை விளக்குகின்றன.

இறைவெளிப்பாட்டை இறை மக்கள் ஆழ்ந்து சிந்தித்தார்கள்; உள்ளத்தில் வைத்துத் தியானித்தார்கள்; பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்கு செவி கொடுத்தார்கள். இதன் காரணமாக, அப்போஸ்தலப் பாரம்பரியம் வளர்ச்சியுற்றது. இந்தப் பாரம்பரியம் நாளாவட்டத்தில் எழுத்துருவில் இடம் பெற்றது. பாரம்பரியம் முழுவதும் வேதாகமத்தில் இடம் பெற்றதாகக் கருதமுடியாது.

பாரம்பரியமும், திருமறை நூலும் ஒரே ஊற்றில் இருந்து உருப்பெற்ற காரணத்தால் இவை இரண்டும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. எனவே, இவை இரண்டையும் சரிசமமாக நாம் மதிக்க வேண்டும். இவை இரண்டிற்கும் விளக்கம் தரும் உரிமையும் போதிக்கும் கடமையும் திருச்சபைக்குரியது. இது இறைவெளிப்பாட்டின் மையமும் முற்றுமான கிறிஸ்துவினால் திருச்சபைக்கு அருளப்பட்டது.

திருமறை பற்றித் திருச்சபை அளிக்கும் விளக்கம் பாரம்பரியம், திருமறைநூல் ஆகிய இவற்றைவிடச் சிறந்ததாகவோ அல்லது புறம்பானதாகவோ இருக்கமுடியாது. திருச்சபையின் அதிகாரம் இறைவெளிப்பாட்டிற்கு மேற்பட்டதன்று. திருச்சபையின் போதனை, இறைவார்த்தைக்குப் பணிபுரிவதாக அமைகின்றது. இவ்வண்ணம் திருமறை நூலும், பாரம்பரியமும் திருச்சபையின் போதனையும் பரிசுத்த ஆவியின் தனிப்பட்ட துணையின் கீழ் ஒன்றாக இணைகின்றன.

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சேற்றில் மலர்ந்த செந்தாமரை

அந்தத் தெருவில் அதுதான் பெரிய பங்களா. அந்த பங்களாவின் மஞ்சள் நிற வர்ணம் காலை இளம் வெயிலில் இன்னும் தங்க நிறமாகக் காட்சியளித்தது. பங்களாவிலிருந்து வீதிக்கு வர அழகாகச் செப்பனிடப்பட்ட கற்பாதை. பாதை முடிவில் பெரிய இரும்புக்கதவு. அதனருகில் ஒரு காவற்காரன். அப்பாதையின் இரு மருங்கேயும் அழகாக நடப்பட்ட பூஞ்செடிகள் அளவாக வெட்டப்பட்டு செழித்தோங்கி நின்றன. அச் செடிகளின் இலைகளில் தங்கியிருந்த பனித்துளிகள் காலை வெயிலில் பளபளத்துக் கொண்டிருந்தன.

அன்று ஞாயிற்றுக்கிழமை. நேரம் காலை எட்டுமணி. சுருட்டை சுவாரசியமாகக் குடித்துக்கொண்டிருந்த காவற்காரன் வாசலின் அருகில் ஒலித்த காரின் ஹொரன் ஒலியைக் கேட்டுத் திடுக்கிட்டு சுருட்டையும் நழுவ விட்டுப் பதறியடித்துக் கொண்டோடிப்போய் தாழ்ப்பாளை விலக்கி கதவைத் திறந்து காருக்கு வழிவிட்டான். ஆனால் காருக்குள் இருந்த அருளப்பாவுக்குப் பொறுமையில்லை. ''ரோட்டுல் திரிகிற கஞ்சப் பயலுக்கு காவல் வேலை கொடுத்தா சுருட்டுக் குடிக்கையும் சுருண்டு படுக்கவும்தான் தெரியும்'' என்று அதிகார மமதையோடு வார்த்தைகள் பறந்தன. அதற்குள் சாரதி காரை மெதுவாகக் கற்பாதையில் செலுத்தி பங்களா வாயிலின் அருகே நிறுத்தினான்.

காரிலிருந்து இறங்கிய அருளப்பா, காவற்காரன் இருந்த திக்கை ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு முன்னால் விழுந்த தங்கச் சங்கிலியை அலட்சியமாகப் பின்னால் போட்டுக்கொண்டு பங்களாவை நோக்கி விரைந்தார். பங்களா வாசலில் உரையாடிக்கொண்டு இருந்த இருவரைக் கண்டதும் அவர் முகம் பாறைபோல் இறுகியது, அவரது கிட்லர் மீசையும் ஒருதரம் சுருங்கி விரிந்தது. அங்கு கதைத்துக் கொண்டிருந்தது வேறு யாருமல்ல, அவரது மகன் சுந்தரும் அவனது நண்பன் விக்டரும்தான். விறுவிறுவென்று அவர்கள் நின்ற இடத்தையடைந்த அருளப்பா முகத்தை இன்னும் விகாரமாக்கிக்கொண்டு ''சுந்தர் யார் உன்னை இந்த இழிந்த சாதிக்காரனோடு கதைக்கச் சொன்னது? இவனை எல்லாம் வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வரலாமா? இந்த கீழ் சாதிக்காரனோடு உறவு வைச்சா நம்மை நாலுபேர் மதிப்பாங்களாடா? அனுப்புடா வெளியே'' என்று வார்த்தைகளை அனல்போல் அள்ளி வீசினார். இதயத்தையே பிழிந்தெறியும் வார்த்தைகளைக் கேட்டு கூனிக் குறுகிப் போனான் சுந்தரின் நண்பன் விக்டர். ''அப்பா, வீட்டுக்கு வந்த ஒருவரை இப்படியா மரியாதை இல்லாமல் பேசுவதா? நம்மைப்பற்றி என்ன நினைப்பாங்க''? என்று நண்பனுக்காகப் பரிந்து பேசினான் சுந்தர். ''ஆகா! இவர் பெரிய துரை நம்மைப் பற்றி நினைக்க; பாவம் வீட்டுக்கு வந்த துரை தரையிலே நிக்கிறார். உள்ளே அழைத்துப் போய் சோபாவில் உக்கார வைச்சு குளிர்பானம் கொடுத்து ஐயாவை உபசரி. வீதியிலே திரிகிற துப்புக்கெட்ட நாய்ச் ஜென்மங்கள்'', என்று ஏளனத்துடனும் ஆத்திரத்துடனும் பொரிந்து தள்ளினார் அருளப்பா. உள்ளத்தையே ஊடுருவிக் கொண்டு போகும் வேல் போன்ற வார்த்தைகளை மேலும் சகிக்க முடியாத விக்டர் அவமானத்தோடு மெதுவாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். அங்கிருந்த உயர்சாதி நாயும் அவனைப் பார்த்துக் கேலி செய்வது போல் பாய்ந்து பாய்ந்து குரைத்தது.

',என்னப்பா, இது ஞாயிற்றுக்கிழமை, அதுவும் இப்போதான் பூசைக்குப் போய் விட்டு வந்து உடுப்பும் கழற்றாமல் ஒருவரை உள்ளம் உடையப் பேசி அனுப்பிவிட்டீர்களே? இதுதானா கத்தோலிக்கரின் முன்மாதிரிகை;

அ. அனஸ்டின் பத்திநாதன்,
பாலையூற்று, திருகோணமலை.

சமுதாயத்தின் கடைசி எல்லை வரை அடித்துத் துரத்தி யாவராலும் ஒதுக்கப்பட்ட குஷ்டரோகிகளைக் கூட தொட்டுக் குணமாக்கினார் உலக இரட்சகர் இயேசு. பாவிகளெனப் பரிகசிக்கப்பட்டு சமுதாயத்தில் இருந்து பிரித்து வைத்த ஆயக்காரனோடு உண்டு உறவாடினார் அந்த உத்தமர். அந்த உத்தமர் காட்டும் வழியைப் பின்பற்றும் கத்தோலிக்கரா நாங்

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சேற்றில் மலர்ந்த...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கள்? அப்படித்தானா நம் அயலானையும் நாம் அன்பு செய்யும் முறை''? என்று அமைதியாகக் கேட்டான் சுந்தர். அருளப்பாவின் உதடுகளில் கோபமும், ஏளனமும் கலந்த வறட்டுச் சிரிப்பொன்று இழையோடியது. ''ஆகா! இவர் பெரிய தத்துவஞானி. இவர் தான் இருபதாம் நூற்றாண்டு இரட்சகர் இயேசுநாதர். இவர்போய்த்தான் மூடின செங் கடலைத் திறந்து கீழ்சாதிக்காரரை அதால் கூட்டிக்கொண்டு போகப் போறார். அவங் களைத் தொடர்ந்து வருகிற மேல்சாதிக்காரங்க எல்லாம் இடையிலே மூழ்கிடப் போறாங்க. டேய் மகாத்மா காந்தியுடைய அம்மா காந் திக்கு ஒருநாள் என்ன சொன்னா தெரியுமா? வீட்டுத் தோட்டியைத் தொட்டால் அதற் குக் கழுவாயாக ஒரு முஸ்லிமைத் தொடச் சொன்னா. அதைப் போய் நீயும் இப்ப செய் டா'', என்று அத்துடன் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு' வீர்ரென்று பங்களா வுக்குள் நுழைந்தார் அருளப்பா. தனியாக விடப்பட்ட சுந்தர் தன் அப்பாவால் அவ மானப்பட்டுப் போன விக்டரை நினைத்து வேதனைப்பட்டான். வீட்டுக்கு வர மறுத்த வனை நானல்லவா வற்புறுத்தி அழைத்து வந்து, இந்த அவமானத்துக்கு உள்ளாக்கி விட்டேன், என அருந்துயர்ப்பட்டான். ஏதோ ஓர் தீர் மானம் செய்தவனைப் போல் உடனே விக்ட ரின் வீட்டுக்கு ஓடினான் சுந்தர்.

அருளப்பா சாதாரண மனிதரல்லர். பெரும் பணக்காரர். ஆனால், சாதி பாகுபாடு பார்ப்பவர். பத்திரிகை கொண்டு வரும் பைய னைக் கூடப் படியேற விடமாட்டார். பூசைக் குப் போனாலும் உயர்ந்த வகுப்பாரோடுதான் இருப்பார். சாதாரண மக்கள் இருக்கும் இடத்தை அருவருப்புடன் பார்ப்பார். பணம் இருந்தும் அவரிடம் பண்பாடு இல்லை.

அன்று சுந்தரின் இருபத்தேழாவது பிறந்ததினம். அருளப்பாவின் இல்லம் அழ காக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அந்நகரி லுள்ள அருளப்பாவின் நண்பர்களான ஏனைய சாதி தீர்க்கும் நீதிபதிகளும் அங்கு வருகை தந்திருந்தனர். ஆனால் சுந்தரின் நண்ப ரென ஒருவரும் அங்கில்லை. அருளப்பாவின் நண்பரொருவர் ''எங்கப்பா உன் மகன் சுந்த ரைக் காணோம்'' என்று கேட்க, ''அவன் தன்னுடைய நண்பன் ஒருவனை அழைச்சிட்டு வர போயிருக்கிறான். உயர்ந்த அந்தஸ்துக் காரனாம். அதுதான் கூட்டிக்கிட்டு வர கார் கொண்டு போயிருக்கிறான்''. என்று உற்சாக மாகப் பதில் கூறினார் அருளப்பா. நீண்ட பங்களா வெளியில் எல்லோரும் கூட்டங் கூட்டமாக உரையாடிக் கொண்டிருந்தனர். அருளப்பா அங்குமிங்கும் ஓடி வேலைக்காரரை விரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது வாயிலில் சுந்தரின் கப்பல் போன்ற கார் மெதுவாக வந்து நின்றது. அங்கிருந்தவர்களின் கண்களெல்லாம் காரி லிருந்து இறங்கப் போகிறவர்களையே கண் காணித்துக் கொண்டிருந்தன. முதலில் காரை விட்டு சுந்தர் கீழே இறங்கினான். அவனைத் தொடர்ந்து விக்டர் கீழே இயங்கிய பின்பு காரின் பின் கதவைத் திறந்துவிட அதிலிருந்து ஓர் இளம்பெண்ணும், அருளப்பாவின் வயதையொத்த ஒரு மனிதரும் இறங்கி எல் லோருமாக பங்களாவுக்குள் நுழைந்தார்கள். விக்டரைக் கண்டதும் அருளப்பாவின் முகம் சற்றுக் கலவரப்பட்டது. என்றாலும் அதை வெளிக்காட்டாமல் சுந்தருக் கருகில் வந்து ''இவங்கதானா நீ சொன்ன பெரிய இடத்து நண்பர்கள்'' என்று விக்டரை ஓரக் கண்ணால் பார்த்தபடி கேட்டார்.

''ஆமப்பா, இவங்கதான். விக்டரைத் தான் உங்களுக்கு ஏற்கனவே தெரியுமே. என் பிறந்த தினத்தன்று ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு சொல்லப்போகிறேன். இவர்தான் விக்டரின் தங்கை அமலா. என் எதிர்கால மனைவி. இவளைத்தான் நான் திரு மணம் .... ....'' அவன் பேசி முடிக்குமுன், ''என்ன? இவள் விக்டரின் தங்கையா? நாயின் குட்டியா? என்னடா உளர்றாய்'' என்று எம் பிக் குதித்தார் அருளப்பா, ''குளறுதிங்கப்பா. நான் உளறவில்லை.'' நான் கூறினது எல்லாம் உண்மை இவர்தான் விக்டரின் அப்பா என்று காரிலிருந்து இறங்கிய அந்த மனிதரைச் சுட் டிக் காட்டினான் சுந்தர். அலட்சியத்துடன் அவரை நோக்கிய அருளப்பா திடுக்கிட்டு மறு கணம் திரும்பி சுவரில் தொங்கிய பெரிய புகைப்படத்தைப் பார்த்தார். அடுத்த கணம் அந்த மனிதரைப் பார்த்து இவர்.... இவர்.... விசுவாசம் என்று தடுமாறித், தள்ளாடி விழப் போன அருளப்பாவை சட்டென்று தாங்கிக் கொண்ட சுந்தர், ''என்ன விக்டர், எங்கப் பாவை உங்கப்பாவுக்கு ஏற்கனவே தெரியுமா; அவருடைய பெயர்கூடச் சொன்னாரே'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான். ஒன்றும் புரியாத விக்டரும் தன் தகப்பனைப் பார்க்க அவரும் சிரித்துக் கொண்டே ',ஆம் சுந்தர் உங்கப்பாவுக்கு என்னைத் தெரியும் மட்டு

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆயர் நியமன

## வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

மகா வந். இக்னேசியஸ் கிளெனி இ. ச. ஆண்டகை அவர்களின் **ஆயர் நியமன வெள்ளி விழா** ஆடி மாதம் 10ம் நாள் திருகோணமலை – மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் எல்லாப் பங்குக் கோவில்களிலும் கொண்டாடப்பட்டது. அன்று தினம் ஆயர் அவர்களுக்காக நன்றியறிந்த தோத்திரப் பலிகளும், விசேஷ வேண்டுதல்களும் ஒப்புக்கொடுக்கப்பட்டன. மட்டக்களப்பு உடன் ஆசனக் கோயிலில் மகா. வந். துணை ஆயர் தலைமையில் கூட்டுப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவ்வேளை துணை ஆயர் அவர்கள் மகா வந். இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை அவர்களின் 25 வருட ஞானச் சேவையைப் பாராட்டி அரியதோர் அருளுரை நிகழ்த்தினார். தாயகம் சென்றிருக்கும் ஆயரவர்கள் ஆவணித் திங்கள் நடுப்பகுதியில் நம்மிடம் திரும்பி வருவார் என்றும் அறிவித்தார். ஆயர் அவர்களின் **ஆயர் அபிஷேக வெள்ளி விழா** எதிர்வரும் புரட்டாதித் திங்கள் 22ந் திகதி மறை மாவட்டத்தில் கொண்டாடப்படும்.★

# துறவற வெள்ளி விழா

சங்கைக்குரிய தாயார் மேபிள் A. C. அவர்களின் துறவற வெள்ளி விழா சென்ற மாதம் 15ம் திகதி புளியந்தீவு புனித மரிய நாயகி உடன் மேற்றிராசனத் தேவாலயத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தாயார் அவர்களின் குடும்பத்தினரும், மற்றும் குருக்கள், கன்னியர் பொதுநிலையினரின் சமூகத்தில் துணைஆயர் அவர்களின் தலைமையில் கூட்டுப்பலி நிறைவேற்றப்பட்டு, தேனீர்விருந்துடன் விழா இனிது முடிவுற்றது.

தாயார் அவர்கள் எம் மறைமாவட்டத்தில் கடந்த 25 வருடங்களாகத் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கல்முனையிலும் சிறந்த ஆசிரியையாகவும் பொறுப்புள்ள தாயாராகவும் அருந்தொண்டாற்றி வருகிறார்கள். இறைவன் இவருக்கு நிறை ஆசீரும் நீடிய ஆயுளும் அளித்து காத்தருளுவாராக.★

# வரவேற்புவசார விழா!

## ஆசனக் கோயில் பங்கு திருகோணமலே.

கனடா தேசத்தில் குருப்பட்டம் பெற்று ஈழம் வருகை தந்த அருட்திரு. கருணை ஜோசப் அடிகளாருக்கு திருகோணமலை ஆசனக் கோயில் மக்கள் வரவேற்புவசாரம் அளித்து கௌரவித்தனர்.

இவ் வைபவம் 1972ம் ஆண்டு ஆடித் திங்கள் 1ம் நாள் அர்ச். சூசையப்பர் ஆ. த. பாடசாலையில் பங்குச் சபைத்தலைவர் திரு. J. இம்மனுவல் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. பங்குத்தந்தை தவத்திரு. G. E. L. வம்பேக் அடிகள் தனது தலைமை உரையில், "திருகோணமலை ஆசனக் கோயில் பங்கை பிறந்தகமாகக் கொண்ட அருட்திரு. கருணை யோசப் அடிகளின் குருத்துவ நிறைவால் இம் மேற்றிராசனம் பெருமைப் படுவதோடு, இன்றைய நிலையில் குருக்களை உருவாக்குவதில் இப் பங்கின் நிலை கவலைக்குரியதென்றும், நீண்டகால இடைவெளிக்குப்பின் இப்பங்கு ஒரு குருவைப் பெற்றுள்ளதெனவும்" அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியை திருமதி வேதநாயகம் தனது கருத்துரையில் "பெற்றோர் தம் மக்களை குருத்துவம் பெற இறைவனுக்கு அர்ப்பணிப்பதில் பெருமைப்பட வேண்டும்; அன்றாட வழக்கங்களில் பெற்றோர் தம் மக்களுக்கு தேவ பக்தியை ஊட்டுவதன் மூலம் குருக்களை உருவாக்கும் வாய்ப்பு அங்கே ஏற்படும்" என்ற கருத்தை அவர் தெரிவித்தார்.

தனக்களித்த வரவேற்புக்கு அருட்திரு. கருணை ஜோசப் அடிகள் நன்றி தெரிவிக்கையில் தான் பிறந்த இவ் ஆசனக்கோயில் பங்கில் சேவையாற்ற முடியாத நிலைமை தனக்கு மனத்தாங்கலைக் கொடுத்தாலும், இறையன்பில் தனது சேவை மனித இனத்துக்குப் பொதுவானதென" அவர் குறிப்பிட்டார். அன்னாரின் சொல்வன்மை பலரின் உள்ளத்தைக் கவர்ந்தது.

இதைத் தொடர்ந்து சிறப்பம்சமாக பாடசாலை மாணவர்களின் வில்லுப்பாட்டு, நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஈற்றில் பங்குச்சபை செயலாளரின் நன்றி நவிலலோடு விழா சிறப்புற முடிவு பெற்றது.

**எம். பி. ரி. ஆசிர்வாதம்**
செயலாளர்
ஆசனக்கோயில் பங்குச்சபை
திருகோணமலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்களின் வருடாந்த தேசிய மகாநாடு

கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்களின் வருடாந்த தேசிய மகாநாடு கடந்த (July) மாதம் 1ம், 2ம் திகதிகளில் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நடந்தேறியது.

இதுவரை காலமும் பாடசாலை, சபை, பங்கு, பிராந்தியம், மறைமாவட்டம், இலங்கை என்ற குறுகிய எல்லைக்குள் எழும் பிரச்சனைகளை ஆராய்ந்து இந்த அனுபவங்களைக் கொண்டு திட்டங்கள் வகுத்து செயலாற்றிய கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள், இவ்வருட மகா நாட்டில் ''உலகம்'' என்னும் புதிய ஒரு பதமும் தமது கருத்துக்களின் மூலமும் செயல்களின் மூலமும் இணைவதை உணரக்கூடியதாக இருந்தது. இத்தகைய புதிய அனுபவ மாற்றத்திற்குக் காரணம், இந்த மகாநாட்டில் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்களின் உலக சம்மேளன செயற்குழு சிரேஸ்டர் அருட்திரு நீமன் அடிகளாரும், செயலாளர் செல்வி யோசெல் அவர்களும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டமையே. இவர்கள் உலக சம்மேளன பிரதிநிதிகள் என்ற ரீதியில் மட்டுமல்ல, பேச்சாளர்கள் என்ற ரீதியிலும் தமது அனுபவங்களை, தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும் வந்தனர்.

மகா நாட்டின் ஆரம்ப நிகழ்ச்சியாக பலிப்பூசையும், அதைத் தொடர்ந்து உலக சம்மேளன பிரதிநிதிகளின் வரவேற்பும், இலங்கை சம்மேளன சிரேஸ்டர், அருட்திரு பற்றிக் பெரேரா அடிகளாரின் சொற்பொழிவும் இடம் பெற்றன. பிற்பகல் நிகழ்ச்சியின் போது உலக சம்மேளன செயற்குழுவின் செயலாளர் செல்வி யோசெல் அவர்கள் ''உலக கி. வா. சமூகமும் அதன் முயற்சிகளும், சேவையும்'' என்னும் விடயம் பற்றி கருத்துரை வழங்கினார். கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் எப்படியாக திடப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் எவ்வாறு உருவாக்கப்படவேண்டும், என்பதைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்களின் அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் வருடாந்த ஞான ஒடுக்கம், தினமும் 15 நிமிட தியானம், பலிப் பூசையில் முழுமையான பங்கு என்பன மிக அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறினார். மேலை நாடுகளில் தற்போது கி. வா. ச. அங்கத்தவர்கள் தொகை முன்னயதை விட தற்போது குறைந்து கொண்டே போவதைச் சுட்டிக் காட்டிய செயலாளர், ''தொகை குறைந்தாலும் அந்தக் குறைந்த தொகையினரின் சேவை மிகவும் போற்றக் கூடியதாக இருக்கிறது. இதைப்போன்று அங்கத்தவர்கள் தொகையில் அதிகமாய் இருப்பதைவிட செயலில் அதிகமாக இருந்தால் அதுவே போதுமானது'' என்றும் கூறினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் போது அருட்திரு நீமன் அடிகள் கருத்துரை வழங்கினார். ''கி. வா. ச. பொது விதிகள் ஒரு அங்கத்தவன் வாழ்வில் முன்னேற்றத்திற்கு எப்படி செயற்படுகின்றன'' என்னும் தலைப்பில் அவர் உரையாற்றுகையில், கி. வா. ச. பொது விதிகள் எப்படி ஒரு அங்கத்தவனை அவனுடைய வாழ்வு முறையில் கிறிஸ்துவோடு இணைத்து வாழச் செய்கின்றன என்பதையும், இதனுடன் அவனுடைய சொந்த வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், அதைத் தொடர்ந்து அவனுடைய சமுதாய முன்னேற்றத்திற்கும் இட்டுச் செல்கின்றன என்பதையும் பற்றிக் கூறுகையில், ''கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் ஒரு சமுதாயம். கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு, கிறிஸ்துவிற்காக வாழுகின்ற சமுதாயம். அது ஒரு தனிப்பட்ட நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட சபையோ அல்லது சங்கமோ அல்ல. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் வாழுகின்ற ஒரு சமுதாயம். ஆகையால் அது அனைத்திலும் கிறிஸ்துவையே மையமாகக் கொண்டிருக்கிறது, என்று குறிப்பிட்டார்.

இரண்டு கருத்துரைகளைத் தொடர்ந்தும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி பேசுகின்ற குழுக்கள் சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்து கருத்துப் பரிமாற்றங்கள் செய்து தீர்மானங்கள் யாவும் செயற்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காக பொதுச்சபைக்குக் கொடுக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மேற்றிராசனத்தில் இருந்தும் 5 அங்கத்தவர்கள் பங்கு பற்றும் வருடாந்த

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சேற்றில் மலர்ந்த...

[9ம் பக்கத் தொடர்ச்சி]

மல்ல; நான்தான் அவருடைய வாழ்வின் ஆணிவேர். உன்னுடைய தந்தையும் நானும் ஒன்றாகவே படித்தோம். அப்போது எங்கப்பா நல்ல பணக்காரர். ஆனால் உன் தந்தை ஒரு நேர உணவிற்கும் அல்லல்படும் ஏழை. நான் அவரை என் வீட்டில் தங்கவைத்துப் படிக்க வைத்தேன். ஒருநாள் நான் எங்கப்பா அம்மாவோடு வெளியே போயிருக்கும் சமயத்தில், உன் அப்பா வீட்டிலுள்ள பணத்தையும் நகைகளையும் திருடிக்கொண்டு எங்கோ ஓடிவிட்டார். பொலிசில் புகார் செய்யப்போன எங்கப்பாவையும் நான் அப்போது தடுத்து விட்டேன். அன்று அவர் கொண்டுவந்த பணப்பையோடுதான் இதோ சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் என் போட்டோவும் வந்திருக்க வேண்டும்''. என்று அடக்கத்தோடு கூறினார் விக்டரின் தந்தை விசுவாசம். அங்கு வந்திருந்த எல்லோரும் இதைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். சுந்தரின் கையில் சாய்ந்து கொண்டிருந்த அருளப்பா தன் கள்ள வாழ்க்கை அம்பலமாகி விட்டதே என்று அவமானப்பட்டு அங்கு இருந்தவர்களின் முகங்களைப் பார்க்க வெட்கப்பட்டுத் தலையைக் குனிந்து கொண்டார். அவரின் கண்ணீர் சுந்தரின் காலை நனைத்தது. ''விசுவாசம் என்னை மன்னித்து விடப்பா! அன்று நீ உன் அப்பாவைத் தடுத்திராவிட்டால் இன்று நான் சிறையிலிருப்பேன்'', என்று நாத்தழுதழுக்கக் கூறினார் அருளப்பா. அருளப்பாவின் போலி வாழ்க்கை அமலாவின் தாலி கட்டும் நிகழ்ச்சி என்னும் தீயிலே வெந்து ஒருபுது அத்தியாயமாக அன்று ஆரம்பமாகியது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆலயமணியின் இன்னிசை காற்றில் தவழ்ந்து திசையெங்கும் இசைபரப்பியது. அன்று சுந்தருக்கும் அமலாவுக்கும் திருமணம். கோயிலுக்குப் போக எல்லோரும் அலங்கரிக்கப்பட்ட காரினுள் ஏறினார்கள். காவற்காரன் ஓடிப்போய் வெளி இரும்புக் கதவைத் திறந்து காருக்கு வழி விட்டான். அன்று ஆத்திரத்துடன் காவற்காரனைப் பேசி இகழ்ந்த அருளப்பா, இன்று அவனை ஆதரவுடன் பார்த்துப் புன்னகை புரிந்தார். கதவைத் தாண்டிய கார் விரைந்து சென்றது.

(யாவும் கற்பனை).

## கிறிஸ்தவ வாழ்வுச் சமூ...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தின்போது புதிய தலைவராக திரு. சிறில் சவரிமுத்து, உபதலைவர்களாக செல்வன் அல்போன்ஸ் பாய்வா, செல்வி கிளாடிஸ் பெர்ணண்டோ, பொருளாளராக செல்வி எல்வா கொன்சால் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தேசிய சம்மேளன பொதுச் செயலாளராக செல்வன் யோ. றனசிங்கி தெரிவு செய்யப்பட்டார். செயற்குழு அங்கத்தவர்களாக வேறு சிலர் தெரிவு செய்யப்பட்டனர்.

இம் மகா நாட்டில் மூன்று மொழிகளையும் சேர்ந்த 750க்கும் அதிகமான அங்கத்தவர்கள் சமுகம் கொடுத்திருந்தார்கள். கருத்துரைகள் யாவும் மூன்று மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன. கலந்துரையாடல்கள் யாவும் அங்கத்தவர்களே நடாத்தினர். இந்த மகாநாடு கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்களுக்கு உடனுக்குடன் தீர்மானங்களை பெற்றுக்கொடுக்காவிட்டாலும், இதன் அனுபவங்களும், கருத்துக்களும், செயற்குழுவின் இறுதித் தீர்மானங்களும் அகில இலங்கையிலுமுள்ள கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் புத்துணர்ச்சியோடு சேவையாற்றவும், அதில் நிலைத்து நிற்கவும் நிட்சயம் வழிவகுக்கும்.

**"இருதயம்"**
**கி. வா. ச. தேசிய சம்மேளன**
**செயற்குழு உறுப்பினர்**
திருமலை — மட்டுநகர் மேற்றிராசனம்.

## வேதாகமத்தைப்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பாரம்பரியம், திருமறை நூல்கள், திருச்சபையின் ஆசிரியம் ஆகிய மூன்றும் இறைவனின் அதிமிக ஞானமுள்ள திட்டத்தின்படி ஒன்றோடொன்று எவ்வளவு இணைந்து ஒன்றுபட்டு இருக்கின்றனவென்றால் ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்கமுடியாது. மூன்றும் ஒன்று சேர்ந்து, ஆனால், ஒவ்வொன்றும் தத்தம் முறைப்படி பரிசுத்த ஆவியின் செயலினால் ஆன்மாக்களின் மீட்பிற்கு பயன்தரும் முறையில் செயலாற்றுகின்றன. (இறை வெளிப்பாடு இ. 9, 10) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## மறைக்கல்விப் போட்டி - 5.

### பகுதி I. லூக்காஸ் சுவிசேஷம்

1. புனித லூக்காவின் சுவிசேஷத்திலுள்ள தனிச் சிறப்புக்களை ஆதாரங்களுடன் விளக்குக?

2. சரியா, பிழையா, எனக் குறிப்பிடுக.

(அ) சுவிசேஷங்கள் முதன்முதலில் புத்தகங்களாக எழுதப்பட்டன.

(ஆ) சுவிசேஷத்திற்கு இறையாசிரியர், மனித ஆசிரியர் என இரு ஆசிரியர் உள்ளனர்.

(இ) இறையாசிரியருக்கும் மனித ஆசிரியருக்கும் சுவிசேஷம் எழுதப்படும்பொழுது உண்டாகும் தொடர்பு ''இறைவழிபாடு'' எனப்படும்.

(ஈ) நான்கு சுவிசேஷங்களும் குறிப்பிட்ட ஒரு தேவைக்காக மாத்திரமே எழுதப்பட்டன.

(உ) யூத மக்களுக்காக எழுதப்பட்ட லூக்காசின் சுவிசேஷம் கி. பி. 90–100 ஆண்டுகளுக் கிடையில் எழுதப்பட்டிருக்கிறது.

3. பின்வரும் கூற்றுக்களுள் மூன்றின் உட்கருத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுக?

(அ) (நல்ல சமாரியன் உவமை:......................................... ''கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு இம்மூவருள் எவன் அயலான் என்று உமக்குத் தோன்றுகின்றது?'' என்றார் அதற்கு அவன்) ''அவனுக்கு இரக்கம் காட்டியவன் தான்'' என்றான்.

(ஆ) ''உமது அரசு வருக''.

(இ) ''கடவுளின் அரசையே முதலிற் தேடுங்கள். இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்''.

(ஈ) ''அறிவிலியே இன்றிரவே உன் உயிரை வாங்கப் போகிறார்கள். நீ தேடிவைத்தது யாருக்குக் கிடைக்குமோ''.

(உ) ''கடவுளுடைய அரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கின்றது. மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவாறும், கேட்டும் உணராதவாறும் அவை உவமைகளாகக் கூறப்பட்டன''.

### பகுதி II. திருமறை விளக்கம்

4. ''அ'' பகுதிக்குப் பொருத்தமான பகுதியை ''ஆ'' பகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை ''அ'' பகுதியில் கோடிட்ட இடத்தில் எழுதவும்.

''அ''

(அ) சோதனைக்கு நாம் உடன்படும் பொழுது அது ....................

(ஆ) திவ்விய நன்மையில் கிறிஸ்து நாதர் நம்மோடு ....................

(இ) உறுதிப்பூசுதலில் கிறிஸ்து நாதர் நம்மை ....................

(ஈ) நாம் செபிக்கும்போது நமது மனதை ....................

(உ) நாம் பரித்தியாகம் செய்யாமல் இருந்தால் ....................

''ஆ''

1. பரிசுத்த ஆவியினால் நிரப்புகிறார்.

2. கடவுளிடம் செலுத்த வேண்டும்.

3. நம்மைப் பாவத்தில் விழச்செய்கிறது.

4. இயேசுநாதரின் சீடர்களாய் இருக்க மாட்டோம்.

5. மிக நெருங்கி ஒன்றிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

5. பின்வருவன சரியாயின் ''சரி'' என்றும், பிழையாயின் ''பிழை'' என்றும் அடைப்புக் குறியீட்டுக்குள் எழுதுக:

(அ) அற்ப பாவங்கள் நமக்குத் தீமை விளைக்கின்றன. (..............)

(ஆ) கடவுள் நம்மை நேசிப்பதால் நமது அன்பை அவருக்கு செலுத்தத் தேவையில்லை. (..............)

(இ) புனிதர்களிடம் நாம் செபிக்கிறோம்; ஆயினும் அவர்களை நாம் வழிபடுவதில்லை. (..............)

(ஈ) தேவநற்கருணை உட்கொள்ளும்போது ஆண்டவரை முழுமையாகப் பெறுவதில்லை. (..............)

(உ) திருச்சபை நிறைவேற்றும் மிகவும் புனிதமான அலுவல் கடவுளுக்கு வழிபாடு செய்வதே (..............)

6. (அ) சோதனை எப்பொழுது பாவமாகிறது?

(ஆ) பச்சாத்தாபம் என்னும் திருவருட் சாதனத்தினுல் என்ன நடைபெறுகிறது?

(இ) விபத்தில் அகப்பட்டு சாகக் கிடக்கும் ஒருவன் அருகே நீர் இருந்தால், அவனுக்கு எந்தவிதமான செபத்தைச் சொல்லிக்கொடுப்பீர்?

7. ''இறைவனின் வார்த்தையை நாம் காதாரக் கேட்டு அதன்படி நாளாந்த வாழ்க்கையில் நடந்து பயன்தர வேண்டும்''. இக்கூற்றை விதைவிதைப்போனின் உவமையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

**அல்லது**

நம்பியிருந்த நண்பனுற் கைவிடப்பட்டு அதனுல் மனமுடைந்து தவிக்கும் ஒருவனுக்கு கிறிஸ்தவனென்ற ரீதியில் ஆறுதற் கடிதம் ஒன்று எழுதுக?

**மறைக்கல்விப் போட்டி – 3.**

**பரிசு பெறுபவர்கள்**

1. ம. யேசுரெத்தினம், விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.
2. வினேதினி யோசப், கோட்டமுனை மகா வித்தியாலயம், மட்டுநகர்.
3. E. C. இளெனி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்நகர்.

**குறிப்பு:-** திருத்திய விடைப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் முத்திரையும் முகவரியும் கொண்ட நீண்ட உறை **அனுப்பிவைக்கவும்.**

அருட்திரு றெக்ஸ் யோ. செபமாலை

# மாணவர் மன்றம்

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

பாடம் 37.

**நாம் எப்படிச் செபிக்கவேண்டும்.**

இப்பாடம் க. தி. வி. 71ம் பாடமாகும்

*சிந்தித்துப்பார்: விடைகள்:*

1. நாம் செபிக்கும் போது நமது மனதைக் கடவுளிடம் செலுத்தி, யாரிடம் பேசுகிறோம் என்பதை உணர்ந்து, நாம் சொல்லும் வார்த்தைகளை சிந்தித்து செபிப்பதே **கவனத்துடன்** செபிப்பதாகும்.

2. கவனத்துடன் செபம் செய்ய, நாம் நம் எண்ணங்களை சிதற விடாது கட்டுப்படுத்தி, பராக்குக்குரியவைகளை அகற்றிவிட்டு செபிக்க முயல வேண்டும்; நம்மை மீறிப் பராக்கை உண்டாக்கும் எண்ணங்கள்,

[15ம் பக்கம் பார்க்கவும்]

விடைப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பும் பகுதி

**மறைக்கல்விப் போட்டி – 5**

**(விடை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 1-9-72)**

மாணவன்/மாணவி பெயர்:....................

..........................................................

பாடசாலையின் பெயரும் முகவரியும்:........

..........................................................

..........................................................

..........................................................
மாணவன்/மாணவியின் கையொப்பம்

..........................................................
தலைமை ஆசிரியர்/தலைவர் கையொப்பம்

விடைப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி:—

**அருள்திரு றெக்ஸ் யோ. செபமாலை அடிகள்**
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாணவர் மன்றம்...
(14ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வந்தாலும் சரி, அவற்றைப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

3. நாம் பாவிகள், அற்ப மனிதர்கள், அவருடைய கொடைகளை முற்றும் நாடியிருப்பவர்கள் என்ற மனநிலையோடு செபிப்பதே **தாழ்ச்சியோடு** செபம் செய்வதாகும்.

4. நாம் செபம் செய்யும் பொழுது நம்மை முழுவதும் கடவுளிடம் ஒப்படைத்து, அவருடைய சித்தத்திற்கு நம்மைக் கையளித்து, அவர் எப்படி, எப்பொழுது நம்முடைய மன்றாட்டுக்களைக் கேட்பார் என்பதையும் அவரிடமே விட்டு விட்டு செபிப்பதே **பக்தியோடு** செபம் செய்வதாகும்.

5. கடவுள் நம் நேசத்தந்தை, எம் மன்றாட்டுக்களை அவர் எப்பொழுதும் நமக்கு நன்மை பகர்க்கும் முறையில் கேட்பார், என்னும் உறுதியுள்ள மனநிலையோடு செபிப்பதே **நம்பிக்கையோடு** செபம் செய்வதாகும்.

6. சில வேளைகளில், செபம் செய்தல் கடினமாக இருக்கும் பொழுதும், களைப்பாக இருக்கும் பொழுதும் கடவுள் நம் மன்றாட்டைக் கேட்கவில்லையே என்னும் எண்ணத்துடன் இருக்கும் பொழுதும் நாம் செபிப்பதை விட்டுவிடாது, மாறாக இன்னும் அதிகமாகச் செபிப்பதும், செபிக்கத் தெண்டிப்பதுமே **விடாமுயற்சியோடு** செபிப்பதாகும்.

**பயிற்சி:**

கீறிட்ட இடங்களை நிரப்புக:

1. இயேசுநாதர் தாம் சொன்ன ப........ ..................... ஆ......................... என்ற உவமையில், ....................யுள்ள செபத்திற்கும், ....................முள்ள செபத்திற்கும் உள்ள மாறுபாட்டைக் கற்பிக்கிறார்.

2. தன் நண்பனிடம் நடுச்சாமத்தில் போய் மூன்று அப்பங்களைக் கேட்டவனைப் பற்றிய உவமையில் வி.......................... செபம் செய்ய வேண்டும் எனக் கற்பிக்கிறார்.

3. ............................ உங்களுக்குக் கொடுக்கப்படும்.

............................ கண்டடைவீர்கள்.

............................ திறக்கப்படும்.

# துன்பக் கண்ணீர்

''துயர் உறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில்
ஆறுதல் பெறுவர்'' (மத். 5:4)

**''துன்பத்தில் விதைவிதைப்போர் ஒருநாள்**
இன்பத்தினை அடைந்திடுவார் (சங். 125)

**''துன்பக் கண்ணீரில் துளைந்தேற்கு உன் ஆனந்த
இன்பக்கண்ணீர் வருவது எந்நாள்**
பராபரமே'' (தாயுமானவர்).

அன்றாடம் மனிதன் அவனியில் பலவகைக் கண்ணீரைச் சிந்திக்கொண்டே வருகின்றான். அவற்றில் ஒன்றே துன்பக் கண்ணீர். இந்தக் கண்ணீர் செந்நீரைக் கூடக் குறைக்கிறது. உலகை வெறுக்க வைக்கியது. உறவினரை ஒதுக்குகிறது. ஒருவேளை உயிரையே குடிக்கிறது. ஆனால், மேலே குறிபபிட்ட இயேசுவின் சொல்லையும், சங்கீதத்தையும், தாயுமானவரின் பாடலையும் சிறிது நோக்கினால், கண்ணீரால் வரும் மூன்று துன்பத்தையும் பெரும் இன்பமாக மாற்றலால்.

மண்ணில் விளைவை உண்டு பண்ண மழை பெய்கிறது. கண்ணிலிருந்து புறப்படும் துன்பக் கண்ணீர் உள்ளத்தைத் திருத்திச் செப்பனிடுகிறது. கார்மேகம் சூழ்வது பூமியைக் குளிரச் செய்வதற்காக. நனைந்து குளிர்ந்த பூமியில் நின்று விதை முளைக்கிறது. துயரம் என்னும் மேகத்திலும் மழையிலும் மூடப்பெற்ற உள்ளம் ஞான விளைவுக்கு ஏற்றதாகிறது. விசாரம் உள்ளத்தை உழுகிறது. துன்பம் அதை மிருதுவாக்குகின்றது. பின் ஞானோதயம் உண்டாகிறது. இந்த உண்மை துன்பக் கண்ணீர் சிந்தும் மனிதனின் சிந்தனையில் செயல்பட்டால், அவனது துன்பக் கண்ணீர் இன்பக் கண்ணீராக மாறும். இன்பக் கண்ணீரில் இறைவன் அருள் ததும்பும். ஏனெனில், துன்பப்படுவோர் வாருங்கள் ஆறுதல் ஊட்டுவேன், என்றார் இன்பத்தின் சிகரமான இறைவன்.

மண்ணைத் தண்ணீர் பக்குவப்படுத்துகிறது.
என் உள்ளத்தைக் கண்ணீர்
பக்குவப்படுத்துவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஈழத்தின் முதல் தமிழ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கத்தோலிக்க மக்கள் திரள் திரளாக வந்து, ஆயர் அவர்களுக்குத் தங்கள் இறுதி அஞ்சலி செலுத்தி, இராப் பகலாக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலிகளிலும் வேண்டுதல்களிலும் பக்தியுடன் பங்குகொண்டு, அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டினர். இறுதிச் சடங்குகளில் பதினாயிரத்திற்கு அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். அரசாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல பிரமுகர்களும், பிற மதப் பெரியார்களும் சமுகமளித்து, மறைந்த ஆயர் அவர்கள் மேல் தாம் கொண்டிருந்த மதிப்பைக் காட்டினர். கூட்டுத் திவ்விய பூசைப் பலி மகா மேன்மைதங்கிய கருதினால் கூறே ஆண்டகை அவர்களின் தலைமையில் ஆறு ஆயர்கள், பாப்பரசரின் தற்காலிக பிரதிநிதி, வேறு பிரதான குருக்கள் ஆகியோரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதன்பின் மறைந்த ஆயர் அவர்களின் பூதவுடல் யாழ்ப்பாண ஆசனக் கோயிலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தங்கள் நல்லாயனை இழந்து துயருறும் யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் விசுவாசிகள், துறவியர், குருக்கள் ஆகியோருக்கு **"தொண்டன்"** தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்க விரும்புகிறான். இரக்கம் நிறைந்த இறைவன் மறைந்த ஆயரின் ஆன்மாவுக்கு அமைதியும் பேரின்ப வாழ்வும் அருள்வாராக! ★

---

## இலக்கிய மன்றம்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

றொழுக்குப்போல் தங்குதடையின்றிச் செல்கின்றது. எம்மதத்தவராயினும் இந்நூலைப் படிக்கும்போது அவர் பத்திப்பரவசத்தில் ஆழ்வார்; இதுவே நூலின் சிறப்பாகும். நூலிற் சமயப் பூசல்கள், கிண்டல்கள் கிடையா; ஆசிரியர் இறைவனுடன் ஒன்றிவிட்டார்; அந்நிலையிற் பாடிய பாடல்கள் வாழ்க்கை நிலையாமையை மக்களுக்குப் போதித்து நிற்கின்றன வீடுபேற்றுக்கு வழி காட்டுதலே ஆசிரியரின் நோக்கம்'' (பக். 51–52).

பதிப்பாசிரியர் நூலின் பொருளை - கிறிஸ்து மதக் கோட்பாடுகளை – நன்கு அறிந்திராத காரணத்தினால் முதற் பதிப்பிலுள்ள சில பிழைகளைத் திருத்தத் துணியவில்லை. ''பொருள் விளங்காத இடங்களை என் மனம் போனவாறு மாற்ற விருப்பமின்மையால் மூலப்பதிப்பிற் கண்டவாறே பதிப்பித்துள்ளோம்'' என்கிறார். ஞானப்பள்ளின் பொருளை விளங்கிக்கொள்ளல் இலகுவான காரியமன்று. அதில் காணப்படும் பெயர்கள், வரலாற்று இதிகாசச் சம்பவங்கள், மதக்கோட்பாடுகள், விவிலியக் குறிப்புகள் ஆகியவற்றிற்கு விளக்கம் அவசியம் வேண்டப்படுகின்றது. ஆகவே, நூலில் ஆங்காங்கு காணப்படும் பிழைகளைத் திருத்தி, போதிய விளக்கக் குறிப்புகளுடன் ஒரு சிறந்த புதிய பதிப்பை வெளியிடுதல் மிகவும் அவசியமாகும். ★

---

## திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கம்

## நினைவூட்டல்

***விசாரணைப் பங்குகளின் ரீதியில் செய்யவேண்டிய கருமங்கள் :-***

(அ) பொது நிலையினரின் அப்போஸ்தல பணிக் குழுக்கள்:

தங்கள் புது உத்தியோகத்தர்களின் பெயர்களை ஆவணி 15க்கு முன் பங்குக் குரவருக்கு அறிவிக்கவேண்டும் (உபவிதி 5).

(ஆ) பங்குச் சபைகள்:

1. வேலை வருடம் புரட்டாசி 1ல் ஆரம்பமாகி அடுத்த வருடம் ஆவணி 31ல் முடிவடையும் (உபவிதி 4).
2. செலுத்த வேண்டிய கட்டணத்தை ஆவணி 31க்கு முன் பிராந்திய சபைக்கு அனுப்ப வேண்டும் (விதி 25).
3. வருடாந்த அறிக்கையை புரட்டாசி 10க்கு முன் பிராந்திய சபைக்கு அனுப்ப வேண்டும் (உபவிதி 8).
4. தங்கள் புது உத்தியோகத்தர்களின் பெயர்களைப் பிராந்தி அத்தியட்சகருக்கு புரட்டாசி 15க்கு முன் அறிவிக்க வேண்டும் (உபவிதி 5).

(இ) பங்கு ஐக்கிய சங்கம்:

வருடாந்த பொதுக்கூட்டம் ஆவணி மாதக் கடைசி வாரத்தில் நடைபெற வேண்டும் (விதி 29).

செயலாளர்
தி. ம. மே. ஐ. சங்கம்.

---

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1-8-72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media